**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2020**

---

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை II, பிரிவு II (சீ) (3) மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09 (ஆ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட தண்ணீர் சேவைகளிற்கும் முன்னேற்றப்பட்ட சுகாதாரத்திற்ம் அணுகுவழிகளை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்தல், பயிற்சியளித்தல் மற்றும் தண்ணீர் தரத்தினை அடையாளமிடல் ஊடாக துறைகளின் இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்ற பெயருடைய 04 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,840 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக பங்களிப்பு ஊடாக நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், கிராமிய மற்றும் தோட்டத்துறை நீர் வழங்கல் திட்டங்களிற்கான ரூபா 189.87 மில்லியன் மற்றும் செயற்திட்ட வேலைளை பூர்த்தியாக்குவதற்கு கிராமிய நீர் வழங்கல் புனரமைப்பு திட்டங்களில் ரூபா 250.6 மில்லியன் சமுதாய பங்களிளிப்பு அடையாளம் கண்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், சமுதாய பங்களிப்பு மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 440.47 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 440.47 | செயற்திட்டமானது இறுதிக் கொடுப்பனவு செய்யாமலும் மற்றும் முழுமையாக பூர்த்தியாக்கப்படாமலும் சமுதாய பங்களிப்பை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தியாக்கப்பட்ட செயற் திட்டங்களிற்கான சமுதாய பங்களிப்பை இனங்காண வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவரால் ரூபா 21,623 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 116 மில்லியன் கைதவிர்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் நேரொத்த தொகை ரூபா 19,179 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுகைகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2,444 | இலங்கை மத்திய வங்கியானது அத்திகதியில் காசு செலவு வைக்கப்பட்ட வீதத்தின்படி அவ்வீதம் எடுக்கப்பட்டிருந்தது. | கடன் மீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியின் பூர்த்தியாக்கப்பட்ட மலசலகூடங்களின் கிரயம் கிளிநொச்சி, | 26.72 | நாங்கள் இறுதிக் கொடுப்பனவிற்கான முலதனமாக்கல் செய்யப்பட்டமையால் ரூபா | பூர்த்தி செய்யப்பட்ட மலசல கூடங்களின் பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| மொனறாகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ரூபா 245.58 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 218.86 மில்லியன் மூலதனமாக்கப்பட்டிருந்தது. இதன்விளைவால், நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு மீதான அபிவிருத்தி செலவினம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 26.72 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | 218.86 மில்லியன் தொகையை மூலதனமாக்கியிருந்தோம். மிகுதி ரூபா 26.72 மில்லியன் அபிவிருத்தி செலவினமாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) ரூபா 10.54 மில்லியன் மொத்த தாமதக் கட்டணங்களில், மீளாய்வாண்டின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கிராமிய நீர் வழங்கல் திட்டம் தொடர்பில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 7.80 மில்லியனிற்கு சமமான தொகை மாத்திரம் கழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரருடைய கொடுப்பனவுகளிலிருந்து கழிக்க வேண்டிய மிகுதி தொகை ரூபா 2.74 மில்லியன் மீளாய்வாண்டு இறுதியின் நிதி நிலைமைக் கூற்றில் பெறவேண்டியவையாக கருதப்பட்டிருக்கவில்லை. | 2.74 | இந்த தவறினை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் மற்றும் இதனை நாங்கள் 2021 ஆம் ஆண்டில் திருத்துவோம் | பெறவேண்டிய மீதி மற்றும் தாமதக் கட்டணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட கோப்பெரொன் ரண்டபொல செயற்திட்டத்தின் கிரயம் மற்றும் ரூபா 116.92 மில்லியன் பெறுமதியான ஜலகமுவ கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம் என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 116.92 | அந்த செயற்திட்டங்கள் பௌதீக ரீதியாக பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதிவரையும் இறுதி கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, இந்த காரணமாக நாங்கள் இதை நடைபெறும் வேலையின் கீழ் காட்டியிருந்தோம். | பூர்த்தியாக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். |

**2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

| இல | விபரங்கள் | தொகை ரூபா மில்லியன் | தீர்க்கப்படாத காலப்பகுதி | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| ----- | -------------------- | ------------ | ----------------- | ---------------------------------- | -------------------------------------------------- |
| (அ) | வழங்குநர் முற்பணங்கள் | 3.23 | 3 ஆண்டுகளிற்கு மேல் | 2021 ஆம் ஆண்டின் போது அந்த முற்பணங்களை தீர்ப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | தாமதமில்லாமல் வழங்குநருக்கு செலுத்தப்பட்ட முற்பணங்களை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தகாரர் முற்பணம் (வெலிப்பொதாஜா கிராமிய நீர் வழங்கல் திட்டம்) | 2.87 | 2 ஆண்டுகளிற்கு மேல் | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 2,870,875 ஆன தொகை அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | தாமதமில்லாமல் செலுத்தப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை வேண்டும். |
| (இ) | ஒப்பந்தகாரர் முற்பணம் | 182.53 | 3 ஆண்டுகளிற்கு மேல் | 2021 ஆம் ஆண்டின் போது அந்த முற்பணங்களை தீர்ப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | செலுத்தப்பட்ட முற்பணங்களையோ அல்லது அவசியமான போது முற்பண உத்தரவாதங்களை காசாக்குவதற்கோ தொடர்நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வெளி நிறுவனங்களில் வைக்கப்பட்ட குறுகிய கால வைப்புக்கள் | 36.78 | 3 ஆண்டுகளிற்கு மேல் | இந்த ஆண்டிற்குள் சில கொடுப்பனவுகள் விடுவிக்கப்படும். செயற்திட்டத்தின் முடிவுறுத்தலிற்கு முன்னர் அந்த சகலதும் விடுவிக்கப்படும். | தாமதமில்லாமல் குறுகிய கால வைப்புக்கள் அறவிடப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| -- | -------------------------- | -------------------------- | ------------------------------------ | ------------------------------------------ |
| | இலங்கை சனநாயக சோசலீச குடியரசு நிதிப் பிரமாணங்களின் 170(3) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது நான்கு ஒப்பந்தகாரரிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 18.87 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் 2021 ஏப்ரல் 30 வரையும் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் ஒப்பந்தகாரரிடமிருந்து ஏற்றுக்கெள்ளக்கூடியளவு வேண்டுகை பெற்றிருந்தது நாங்கள் செயற்திட்டம் தொடருவதற்கு கால நீடிப்பு செய்யவேண்டியதுடன் இதன் விளைவால் கழிக்கப்பட்ட தாமதக் கட்டணத் தொகையை விடுவிக்க வேண்டியுள்ளோம். | நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி நடக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | நடவடிக்கை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தாமதங்களிற்கான காரணங்கள்/ முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | தாமதமான நாட்கள் | | |
| **நகர, கிராமிய மற்றும் தோட்டத்துறை நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல்** | **நகர நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டம்** | | | | | |
| | பம்பகின்ன நீர் வழங்கல் திட்டங்கள் | 100 | 70 | 489 | தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் காணி மட்டப்படுத்தலின் சில மிகுதி வேலைகள் இருந்ததுடன் அவை | i. விங்கப்பட்ட இலக்கு திகதிக்குள் ஒப்பந்த வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>ii. ஒப்பந்தகாரரின் ஏற்றுக் கொள்ள முடியாத காரணங்களிற்காக கால நீடிப்பு வழங்கப் பட்டிருக்காததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக தாமதக் கட்டணங்கள் |
| | முல்லைத்தீவு நீர் வழங்கல் செயற்திட்டம் | 100 | 85 | 288 | இது 2021 மே மாதம் நடுப்பகுதியில் ஒப்படைக்கப் பட்டது இந்த திட்டம் செயற்திட்டத்தால் சில இணைப்புகள் வழங்கிய பின்னர் 2021 யூன் இறுதியில் கையளிக்கப்படும். | |
| | முழங்காவில் நீர் வழங்கல் செயற்திட்டம் | 100 | 65 | 326 | இந்த செயற்திட்டம் 2021 செப்தெம்பரில் பூர்த்தி செய்யப்படும். | |
| | **கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு** | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வவுகம நீர் வழங்கல் திட்டம் | 75 | 75 | 408 | இந்த செயற்திட்டம் 2021 திசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்படும். | கழிக்கப்பட வேண்டும்.<br>iii. குறைவான செலாற்றலுடைய ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தங்கள் வழங்க வேண்டியதில்லை. |
| டிம்வுலான (தொகுதி iv) ஒருங்கிணைந்த கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு | 100 | 80 | 556 | இந்த செயற்திட்டம் 2021 ஆகஸ்ட் மாத இறுதியளவில் பூர்த்தியாக்கப்படும். | |
| கொத்மலை (தொகுதி iv) ஒருங்கிணைந்த கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு | 100 | 98 | 426 | ஒட்டுமொத்த திட்டத்திலும் தாமதம் விளைந்தமை நான்காவது செற்திட்டத்தில் காணிப் பிரச்சனை உள்ளது. எவ்வாறாயினும், நடைபெறும் வேலையாக உள்ளமையால் இது 2021 ஆகஸ்ட் மாதத்தில் பூர்த்தியாக்க முடியும். | |
| தியத்தலாவ நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம். | 100 | 30 | 573 | இந்த திட்டம் இடை நிறுத்தப்படும் நிலையில் உள்ளது. | |
| லுணுகல நகர நீர் வழங்கல் திட்டம் | 100 | 85 | 594 | மார்ச் 30 இல் பகுதியளவில் ஒப்படைக்கப்பட்டதுடன் இரண்டு மாத காலத்தில் பூர்த்தியாக்கப்படும். | |
| ஒருவெடிவேவா நீர் வழங்கல் திட்டம் (கட்டம் 1) | 100 | 84 | 230 | இந்த திட்டத்தின் மூன்று கட்டங்களில், கட்டம் 1 இன் கீழான வேலைகளின் 80 % பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆகஸ்ட் இறுதியில் ஒப்படைக்கப்படும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒருவெடிவேவா நீர் வழங்கல் திட்டம் (கட்டம் 11) | 100 | 62 | 115 | கட்டம் II 2021 ஆகஸ்ட் இறுதியில் ஒப்படைக்கப்படும். DI குழாய்களின் இறக்குமதிகளில் தாமதம் மற்றும் கோவிட்-19 நோய் தொற்று போன்றவற்றால் தாமதம் விளைந்தது. |
| வுலுவன நீர் வழங்கல் திட்டம் | 80 | 65 | 147 | இது அடுத்த ஆறு மாத காலத்திற்குள் பூர்த்தியாக்க வேண்டியுள்ளது. |
| ஹகமுவ நீர் வழங்கல் திட்டம் | 85 | 55 | 210 | மின்சாரம் பெறுவதில் தாமதம், வேலைத்தளத்திற்கு பம்புகள் வழங்குவதற்கான இறக்குமதி தடைகள், ஒப்பந்தகாரரின் தாமதம் என்பவற்றால் தாமதம் விளைந்தது. வேலைகள் நான்கு மாதங்களில் பூர்த்தியாக்கப்படும். |
| டொம்பகம்மான கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம். | 90 | 75 | 253 | மக்களிடமிருந்தான எதிர்ப்பு காரணமாக நீர்த்தேக்கம் தொடர்பான காணிப் பிரச்சனை இருந்தது. |
| சிங்கமா கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 75 | 820 | 2021 யூலை மாத இறுதியில் பூர்த்தியாக்கப்படும். |
| புலத்ஹம கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம் | 95 | 80 | 59 | திட்டம் பூர்த்தியாக்கப் பட்டதுடன் விநியோக வீட்டு இணைப்புகள் செயற்பாட்டில் உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| கொத்மலை நீர் வழங்கல் செயற்திட்டம் | 95 | 60 | 58 | வேலைகள் நான்கு மாத காலங்களிற்குள் பூர்த்தியாக்கப்படும். |
| ஹோபே நீர் வழங்கல் திட்டம் | 100 | 45 | 334 | அடுத்த ஆறு மாத காலத்திற்குள் பூர்த்தியாக்க வேண்டியுள்ளது. |
| குலத்கொவுபிட்டிய ஒருங்கிணைந்த கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 78 | 55 | 134 | 2021 செப்தெம்பரில் வேலைகள் பூர்த்தியாக்க முடியும். |
| கேகாலை மாவட்டத்தில் ஒரு வீதி செயற் திட்டத்தின் கீழ் கிராமிய அபிவிருத்திக்காக குழாய் பொருத்திகளின் வழங்கல் மற்றும் குழாயிடல். | 100 | 90 | 940 | வீதி செயற்திட்டம் செயற்பாட்டிலுள்ளமையால் இது பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டமாக உள்ள போதிலும் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டது. |
| தெலிகம கிராமிய நீர் வழங்கலின் மிகுதி வேலைகள் | 80 | 52 | 297 | வெடிப்புகளை அகற்றுதற்காக பூச்சு பூசுப்படுகின்றன. இது மூன்று மாத காலங்களிற்குள் பூர்த்தியாக்க வேண்டியுள்ளது. |
| பல்லேபிட்டிய கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 57 | 681 | இந்த நீர் வழங்கல் திட்டம் நிறுத்தப்பட்டது. |
| குபுலுமுல்ல கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 50 | 43 | 122 | இந்த நீர் வழங்கல் திட்டத்தின் வேலைகள் 2021 ஆகஸ்ட் மாத இறுதியில் பூத்தியாக்க முடியும். |
| பீலகந்டுர கிராமிய நீர் வழங்கல் | 100 | 60 | 1064 | |

| | | | | |
|---|---|---|---|---|
| பொன்நகர் பதியபுரம் நீர் வழங்கல் திட்டம் | 90 | 55 | 32 | இந்த நீர் வழங்கல் திட்டத்தின் வேலைகள் 2021 செத்தெம்பர் மாதத்தில் பூத்தியாக்க முடியும். |
| கல்மடுநகர கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 70 | 691 | ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக தாமதப்பட்டிருந்தது. இந்த வேலைகள் 2021 ஆகஸ்ட் இறுதியில் பூத்தியாக்கபடும். |
| ஜெயபுரம் நீர் வழங்கல் திட்டம் | 100 | 70 | 279 | வேலைகள் 2021 ஆகஸ்ட் இறுதியில் பூத்தியாக்கப்படும். |
| இயக்கச்சி நீர் வழங்கல் திட்டம் | 100 | 80 | 541 | |
| உழவனூர் நீர் வழங்கல் திட்டம் | 95 | 48 | 97 | |
| கிளிநொச்சி புதிய நீர் வழங்கல் திட்டம் (நீர்த்தேக்கம்) | 90 | 45 | 35 | சிவில் வேலைகள் பூர்த்தியாக்கட்டது. பம்புகள் வழங்கள் செயற்பாட்டில் உள்ளது. இது 2021 திசெம்பர் மாதத்தில் பூத்தியாக்க முடியும். |
| மாவட்ட ஆதார நிலைய கிராமிய நீர் வழங்கலின் கட்டிடம். | 100 | 85 | 161 | உட்பகுதி தளபாடங்கள் வழங்கல் செயற்பாட்டில் உள்ளது. |
| திருமுறிகண்டி புதிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 55 | 484 | இந்தத செயற்திட்டத்தின் செயலாற்றல் மிகவும் நலிவாக |

| | | | | |
|---|---|---|---|---|
| (நீர்த்தேக்கம்) | | | | இருந்தமையால் நிறுத்தப்பட வேண்டியுள்ளது. |
| புதுக்குடியிருப்பு கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 70 | 411 | பிதான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் வீட்டு இணைப்புகள் செயற்பாட்டில் உள்ளன. |
| தலவாக்கலையில் 25 m3 இயலளவுடைய சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம். | 100 | 70 | 69 | சிவில் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பம்புகள் பொருத்துதல் பூர்த்தியாக்க வேண்டியுள்ளது. |
| மொனறாகலை மாவட்டத்தில் றதுகலவில் சித்த மலசலகூடத்தில் நிர்மாணம். | 100 | 30 | 141 | தொடர்ச்சியான மழை காரணமாக வேலைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் விரைவில் மீளத் தொடங்கப்படும். |
| எடிங்பேக் தோட்டத்தின் மிகுதி மலசலகூடத்தின் நிர்மாணம் | 100 | 70 | 252 | வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. மழை காரணமாக வேலைகள் தடைப்பட்டன. |
| கலஸ்சோச் பெருந் தோட்டத்தின் மிகுதி மலசலகூடத்தின் நிர்மாணம் | 100 | 10 | 85 | அப்பகுதியில் தொடர்ச்சியான மழை காரணமாக வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மூல ஒப்பந்த காலத்தை விஞ்சிய போதிலும் அதே செயற்திட்டங்களிற்காக இரண்டு முதல் ஐந்து சந்தர்ப்பங்கள் வரையான வீச்செல்லையில் பதினொரு நீர் வழங்கல் செயற்திட்ட ஒப்பந்தகாரர்களிற்கு கால நீடிப்பு வழங்கப் பட்டிருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக ஒப்பந்தகாரர்களுடன் ரூபா 512.12 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை வழங்குவதற்கு அனுமதித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | அந்த சகல நீர் வழங்கல் செயற்திட்டங்களின் வேலைகள் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதுடன் முற்பணங்கள் அறவிடப்படும். | (அ முதல் ஒ வரை )<br><br>(i) மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட காலவரையறைக்குள் பூர்ததியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்க வெண்டும்.<br><br>(ii) கால நீடிப்பு வழங்குவதற்குப் பதிலாக நலிவாக செயற்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து தாமதக் கட்டணங்கள் கழிக்க வேண்டும். |
| (ஆ) | கிளிநொச்சி, நுவரெலியா, மொனறாகலை மற்றும் கேகாலை மாவட்டங்களில் மீளாய்வாண்டின் போது ரூபா 289.35 மில்லியன் பெறுமதியாக ஒப்பந்தங்களுடன் நான்கு (04) நீர்தேக்க செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் மொனறாகலை மாவட்டம் தவிர்ந்த வேலைகள் மீளாய்வாண்டு இறுதியளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கிளிநொச்சி மாவட்ட செயற்திட்டம் மாத்திரம் ஒப்பந்த காலப்பகுதி 09 மாதங்களாக இருந்த போதிலும் 20 மாதங்களிற்காக மூன்று தடவை நீடிப்புகள் பெற்ற பின்னர் மீளாய்வாண்டு இறுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | வேலையின் நோக்கெல்லையை மாற்றியமையால் தாமதப்பட்டிருந்தது என நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். | (iii) ஒப்பந்தகாரர் உரிய காலத்தில் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு அறிவுறுத்த வேண்டும்.<br><br>(iv) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் உடனடியாக மீள வழங்க வேண்டும்.<br><br>(v) செயற்திட்டம் தொடங்குவதில் போதிய செயற்திட்ட காலப்பகுதி இனங்காணப்பட வேண்டும்.<br><br>(vi) செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு தொடங்கப்பட வேண்டும்.<br><br>(vi) ஒப்பந்தங்களை நிறுத்துவதற்காக |

| | | |
| --- | --- | --- |
| (இ) தலவாக்கலை நீர் தேக்க சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 12 மாதங்களில் பூர்த்தியாக்கவேண்டுமென பட்டியலிடப்பட்டு 2019 ஒக்தோபரில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் 2020 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி காலாவதியாகியிருந்த போதிலும் ஒப்பந்தகாரர்களிற்கு காலநீடிப்பு வழங்கப்பட்டிரக்கவில்லை. | இது இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் 2021 ஆகஸ்ட் மாதத்தில் பூர்த்தியாக்கப்படும். | செயலாற்றல் பிணைமுறி முற்பண உத்தரவாதம் என்பன ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் திரும்ப கோரப்படாமல் சாத்தியமானளவு விரைவில் காசாக்கப்பட வேண்டும்.<br><br>(vii) செயற்திட்டங்கள் தவிர, உரிய அதிகாரிகளுடன் முறையான ஒருங்கிணைப்பின் பின்னர் (உதாரணம்: பாடசாலைகள்) மற்றும் உள்ளபடியான வேண்டுகை அடிப்படையில் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) இரத்தினபுரி மாவட்டத்தில் நான்கு பாடசாலைகள் மற்றும் இரண்டு வைத்தியசாலையில் சுகாதார வசதிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2020 ஒக்தோபர் 15 இல் ரூபா 25.5 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர்களால் வேலைகள் தொடங்கும் நேரத்தில் அன்டான வைத்தியசாலை மற்றும் குணுவல தர்மராஜா பாடசாலையின் நிர்மாண நடவடிக்கைகள் முறையே சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகளால் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என வெளிப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 1,618,394 தொகையான மேற்குறிப்பிட்ட இரண்டு செயற்திட்டங்கள் தொடர்புபட்ட முற்பணங்கள் நலிவான ஒப்பந்த முகாமைத்துவ நிர்வாகம் காரணமாக ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 சனவரி 09 இல் செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதி பட்டியலிடப்பட்ட போதிலும் ஒரு சுகாதாரம் தொடர்புபட்ட செயற்திட்ட நடவடிக்கைகளேனும் 2021 பெப்ரவரி 19 அளவில் ஒப்பந்தகாரரால் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | அன்டான வைத்தியசாலையில் மலசலகூட நிர்மாண வேலை நோக்கெல்லையிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. தர்மராஜ் பாடசாலையில் சுகாதார வேலைகள் உள்ளடங்கலான ஏனைய வேலைகள் செயற்பாட்டில் உள்ளது. கோவிட்-19 நோய் தொற்று காரணமாக வேலைகள் தாமதப்பட்டிருந்தது. | |
| (உ) ரூபா 98.6 மில்லியன் கிரயத்தில் பதுளை மாவட்டத்தில் உடுபட்டாம நீர் வழங்கல் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2019 | உடுபட்டாம திட்ட ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதி வேலைகான கேள்வி கோரல் செயற்பாட்டில் உள்ளன. | |

| | | |
|---|---|---|
| | பெப்ரவரி 13 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது. பின்னர், ஒப்பந்தகாரரின் நலவான செலாற்றல் காரணமாக வேலைகளின் 52 சதவீதம் பூர்த்தியான பின்னர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கான ஒப்பந்தம் 2021 ஏப்ரல் 30 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஊ) | கிளிநொச்சி மாவட்டத்தில் ரூபா 216.93 மில்லியன் கிரயத்தில் பொன்நகர் பாதிபுரம் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட சிவில் ஒப்பந்த வெலைகள் 2018 ஒக்தோபர் 20 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது. பின்னர், 36 சதவீதமான வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போது ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், மீதி வேலைகளின் பூர்த்தியாக்கல் வேறு ஒப்பந்தகாரருக்கு 2019 நவம்பர் 15 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 நவம்பர் 28 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2021 ஏப்ரல் 30 வரையும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்தார். | வேலை 2021 செத்தெம்பரில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டது. |
| (எ) | பதுளை தியத்தலாவ நீர் வழங்கல் திட்டத்திற்காக வழங்கப்பட ஒப்பந்தம் ரூபா 337.44 மில்லியன் கிரயத்தில் 2018 மே 23 இல் 12 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட பட்டியலிடப்பட்டதுடன் 2019 மே 06 இல் ரூபா 57.65 மில்லியன் தொழிலாரம்பிப்பு ஒப்பந்தகாரர் வழங்கிய ஏற்றுக்கொள்ளல் கடித திகதியிலிருந்து 42 நாட்களிற்குள் செயற்திட்ட நடவடிக்கைகளை தொடங்குவதற்கு தவறியிருந்தார். 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 30 | தியத்தலாவ நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாண வேலைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் செயற்திட்டம் என்பவற்றால் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடைய செயலாற்றல் மேலும் வீழ்ச்சியடைந்தமையால் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. |

சதவீதமாக இருந்ததுடன் தொழிலாரம்பிப்பு முற்பணங்களை செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தாமல் ஒரு ஆண்டும் ஆறு மாதங்களிற்கும் மேலாக கையில் வைத்திருந்தனர். மேலும், ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரின் செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண உத்தரவாதத்தை காசாக்குவதற்கு உரிய அமைச்சு செயலாளரால் 2020 சனவரி 31 இல் வங்கிக்கு பணம்கோரல் கடிதம் அனுப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண உத்தரவாதத்தை காசாக்காமல் தகுதிக்காலத்தை ஏழு மாதங்களின் பின்னர் உரிய அமைச்சு செயலாளரால் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரரின் செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண உத்தரவாத தகுதிக்காலம் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றலிற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் முறையே 2021 யூலை 31 மற்றும் 2022 சனவரி 31 வரை திரும்பவும் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஏ) செயற்திட்ட காலப்பகுதியின் போது மேற்குறிப்பிட்டவற்றில் 07 மாவட்டங்களில் நிர்மாணிக்க வேண்டிய 20,878 மலசல கூடங்களில் 14,662 மலசல கூடங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டு இறுதியில் பதுளை மாவட்டத்தில் 6,330 மலசல கூடங்கள் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 4,046 மலசல கூடங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டவற்றில் 67 சதவீதம் மற்றும் 15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முறையே பதுளை மாவட்டத்தில் 4,284 மற்றும் கேகாலை மாவட்டத்தில் 605 மாத்திரம் மீளாய்வாண்டு இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

நலிவான செயலாற்றலின் விளைவால் நாங்கள் சில மாவட்டங்களில் மலசல கூட நிர்மாண அமுலாக்கலை தாமதப்படுத்தியிருந்தோம்.

| | | |
|---|---|---|
| (ஐ) | செயற்திட்டத்திக் ஆரம்ப திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா பிரதேச செயலகத்தில் மிருக வைத்தியப் பிரிவு நிர்மாணிக்கப்பட வேண்டுமென விசேட தேவையுள்ளது. எவ்வாறாயினும், இது 2021 ஏப்ரல் 30 வரையும் தொடங்கபப்பட்டிருக்கவில்லை. | இது கேள்வி நடைமுறையின் நலிவான செயலாற்றலாக உள்ளது. |
| (ஒ) | மீளாய்வாண்டிற்காக நீர் வழங்கல் அமைச்சின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், பதுளை-கல்டிமுல்ல நீர் வழங்கல் திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் இது தொடர்பான ரூபா 7.06 மில்லியன் தொகையான செலவினம் 2028 மற்றும் 2019 ஆம் ஆண்டின் பொதன இழப்பீட்டு செலவினம் மீதான வட்டிச் செலவினம் ரூபா 202,430 உள்ளடங்கலான காணிச் சுவீகரிப்பு, மண் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்றவற்றிற்காக செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தமானது 2021 ஏப்ரல் 30 வரையும் வழங்கப்பட்டிருககவில்லை. | கல்டிமுல்ல நீர் வழங்கல் திட்டம் மேலதிக நிதியளிப்பின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. திருத்தப்பட்ட வடிவமைப்பு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மறுபக்கம் நிதிகள் கிடைக்கக்கூடியதாக உள்ளன, கேள்விகள் கோரப்படும். |

## 3.3 வேலைத்தள வருகைகளின் போது செய்யப்பட்ட அவதானிப்புகள்

| இல<br>---- | கணக்காய்வு அவதானிப்பு<br>------------------------------------ | முகாமைத்துவத்தின் பதில்<br>---------------------------------------- | கணக்காய்வாளருடைய சிபார்சுகள்<br>---------------------------------------------- |
|---|---|---|---|
| **(அ)** | **பவமின்ன நகர நீர் வழங்கல் செயற்திட்டம்** | | |
| (i) | செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 செத்தெம்பர் 13 இல் தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் நலிவன செயலாற்றல் மற்றும் நிதி இயலாமை என்பவற்றால் 2020 திசெம்பர் | ஒப்பந்தமானது மிகுதி வேலைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் 2021 ஆகஸ்ட் வரை நீடிக்கப்பட்டிருந்தது. | i) மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட காலவரையறைக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பௌதீக முற்னெற்றம் 70 சதவீதமாக இருந்தது. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து எந்தவொரு தாமதக் கட்டணங்களும் கழிக்கப்படாமல் 2020 நவம்பர் 18 இறுதியில் ஒப்பந்தகாரருக்கு நான்கு தடவைகளில் 434 நாட்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 பெப்ரவரி 15 வரையும் கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | (ii) கால நீடிப்பு வழங்குவதற்குப் பதிலாக நலிவாக செயற்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து தாமதக் கட்டணங்கள் கழிக்கப்பட வேண்டும்.<br><br>(iii) உரிய காலத்தில் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தகாரர் செல்வாக்கு செலுத்த வேண்டும்.<br><br>(iv) செயற்திட்டம் தொடங்குகையில் போதிய செயற்திட்ட காலப்பகுதி இனங்காணப்பட வேண்டும். |
| (ii) | BOQ விடயம் 3.11 மற்றும் 3.12 இன் கீழ் ரூபா 911,925 வழங்கப்பட்டிருந்தத போதிலும் நிர்மாண நடவடிக்கைகளிற்காக போக்குவரத்து வசதி வழங்கும் நோக்கில் நீர்தேக்கத்திற்கான முறையான நுழைவு வீதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | பாரிய மழையின் போது வீதி அடித்துச் செல்லப்பட்டது. கேள்வியில் நிரந்தர வீதி நிர்மாண வேலைகளை நாங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்களின் போக்குவரத்து வசதி வழங்கும் நோக்கில் நீர்தேக்கத்திற்கான முறையான நுழைவு வீதி வழங்கப்பட வேண்டும். |
| (iii) | நீர்த்தேக்கத்தின் பராமரிப்பு இல்லம், மற்றும் மன்வத்த நிலத்தடி நீர்த்தேக்கம், மன்வத்த நிலத்தடி நீர்த்தேக்கத்தின் தாபிப்பு இல்லம், ஜக்டேகிவெல நிலத்தடி நீர்த்தேக்கத்தில் காவலாளி இடம் என்பவற்றின் நிர்மாணம் 2021 பெப்ரவரி 15 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. | மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட காலவரையறைக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கப்பட வேண்டும். |
| (iv) | ஜக்டேகிவெல நிலத்தடி நீர்த்தேக்கத்தின் பௌதீக பரிசோதனையின் போது இரண்டு கசிவுகள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், கசிவுகளை திருத்துவதற்கு | ஒப்பந்தகாரர் வேலையை கையளிக்க முன்னர் சகல கசிவுகளையும் பூர்த்தியாக்கியிருந்தார். | நிர்மாணத்தின் போது செயற்திட்ட பொறியியலாளர்களால் செயற்திட்டத்தால் நெருக்கமாக கணக்காணிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) 42,079 மீற்றர்கள் மொத்த பரிமாற்ற குழாயிடலில், 2021 பெப்ரவரி 21 இல் 33,659.7 மீற்றர்கள் பரிமாற்ற குழாயிடல் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் பவிகின்ன-பலாங்கொட வழி மற்றும் பவிகின்ன- பதுளை வழி என்பவற்றின் குழாயிடல் வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மிகுதி குழாயிடல் வேலைகளிற்காக புதிய ஒப்பந்தம் அழைக்கப்பட்டிருந்ததுடன் வேலைகள் தொடங்கப்பட்டது. | (i) மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட காலவரையறைக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கப்பட வேண்டும்.<br><br>(ii) நலிவாக செயற்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து தாமதக் கட்டணங்கள் கழிக்கப்பட வேண்டும்.<br><br>(iii) உரிய காலத்தில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் செல்வாக்கு செலுத்த வேண்டும். |
| (ஆ) நிவித்திக்கல கிராமிய புனரமைப்பு நீர் வழங்கல் திட்டமானது 34 சமுதாய அடிப்படை அமைப்புகளில் 10,000 மீட்டர்கள் பொருத்துதல் நோக்கத்துடன் 2018 செத்தெம்பர் 12 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் ஐந்து மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2021 பெப்ரவரி 19 இல் உள்ளவாறு பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியின் 2 ஆண்டுகளின் பின்னர் 7,608 தண்ணீர் மீட்டர் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தது. | சமுதாய அடிப்படை அமைப்புகள் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தண்ணீர் மீட்டர் பொருத்துதலில் அக்கறை காட்டியிருக்காமையால் தண்ணீர் மீட்டர் பொருத்துததல் பூர்த்தியாக்க முடியவில்லை. வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட போது ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட வேண்டும். | செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னர் தெளிவான வேண்டுகையை இனங்காணும் நோக்கில் முறைப்படி செயற்திட்ட ஆவணம் மற்றும் சாத்திய வளக் கற்கைகள் செய்யப்பட வேண்டும். |

**3.4 பயன்படுத்தா / குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பவிகின்ன நகர நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக ரூபா 7,140,000 கிரயத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மின்பிறப்பாக்கிகள் மன்னவத்த நிலத்தடி நீர்த்தேக்க வேலைத் தளத்தில் மின்பறிப்பாக்கி இல்ல நிர்மாணம் தவறியமையால் பயனற்று இருந்தது. | ஒப்பந்தம் பூர்த்தியாக்க முன்னர் மின்பிறப்பாக்கி பொருத்தப்படும். | சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் என்பவற்றிற்கு ஏழு வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 1.22 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | அந்த வாகனங்கள் செயற்திட்ட அமுலாக்கல் அமைப்பின் இயலளவு அபிவிருத்திக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. | உரிய நிறுவனங்களிடமிருந்து வானங்களை பெறுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 27,238,510 ஆன கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் ஆய்வுகூடம் வாகனத்தின் உரிமையாண்மையை மாற்றாமல் 2019 ஏப்ரல் 10 இலேயே தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது மாதிரி சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் 24 நாட்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | உரிமையாண்மை மாற்றும் வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. திணைக்களம் வினைத்திறனான நடமாடும் ஆய்வுகூடம் பயன்படுத்தியிருந்தது. | செயற்திட்ட நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்தும் நோக்கில் முறையான கண்காணிப்பு பொறிமுறை இருக்க வேண்டும். |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் பதநவெல-தெலிஹவெவ குருக்குடேகம நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் அண்டலுவா புனரமைப்பு கிராமிய நீர் வழங்கல் திட்டம் என்பன தொடர்பில் ரூபா 844,129 கூட்டுத் தொகையான அசாதாரண கூட்டுத்தொகை அவதானிக்கப்பட்டது. | உடன்படுவதுடன் 2021 மதப்பீட்டு ஆண்டில் இந்த மேலதிகமாக அறவிடப்பட்ட தொகையை தீர்ப்பதற்கு அவசியமான சரியான அளவீடுகள் செய்யப்படும். | சான்றுபடுத்தல் மற்றும் இறுதிக் கொடுப்பனவு செய்தல், ஒப்பந்தகாரருக்கு முற்பணக் கொடுப்பனவை உறுதிப்படுத்தல் என்பவற்றிற்கு முன்னர் மேலதிமாக/ குறைவாக அறவிடப்பட்டிருக்கவில்லை. |

### 3.6 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் பதவியணி 27 பதவிகளைக் கொண்டுள்ளது. அவற்றில், பிரதி செயற்திட்ட பணிப்பாளர், பொறியியலாளர் மற்றும் சமூகவியலாளர் போன்ற பிரதான பதவிகள் உள்ளடங்கலாக 16 பதவிகளில் 108 வெற்றிடங்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 ஆண்டுகளிற்கு மேலாக நிரப்பப்படாது இருந்தது. மேலும், செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு புறம்பாக 136 ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 71.83 மில்லியன் கூட்டுத் தொகையான வேதனங்களை செலுத்தியிருந்தது. அதில் 27 ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்காத நில | காணி உத்தியோகத்தரின் சேவை கொடையாளரின் அதிகாரபூர்வாமான வேண்டுகையாக உள்ளது. அவர் வெளியிலிருந்து சேர்க்கப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் சம்பளப்படி முறைகளிற்கமைய நிலையான சம்பளமாக இருந்தது.<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதி மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் வேலைகளின் தேவை என்பவற்றினை கொண்டிருக்காத படவரைஞர், நில அளவையாளர் மற்றும் வேலைத்தள மேற்பார்வையாளர் என்போர் தற்காலிக அடிப்படையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். | தாமதமில்லாமல் வெற்றிடங்களை நிரப்பவும் அனுமதிக்கப்படாத பதவியணியினரை ஆட்ச்சேர்ப்பைத் தவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவையாளர், படவரைஞர், காணி உத்தியோகத்தர் வேலைத்தள மேற்பார்வையாளர் போன்ற 8 பதவிகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | முழு நேர அடிப்படையில் 2015 ஒக்தோபர் 26 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்ட செயற்திட்ட பணிப்பாளர் 2020 நவம்பர் 05 இலிருந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளராக (மேல் வடக்கு) பதவியுயர்த்தப்பட்டிருந்தார். எனவே, அவருடைய சேவை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவிற்கமைய முழு நேர அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புதிய செயற்திட்ட பணிப்பாளரை அமைச்சு /தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலைமப்பச் சபை நியமிக்க வேண்டியுள்ளது. | முழு நேர செயற்திட்ட பணிப்பாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |